# தூய லூர்து அன்னை ஆலயம்


50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com


| | | |
|---|---|---|
| 10~09~2017 | பொதுக்காலம் 23ம் ஞாயிறு | முதல் ஆண்டு |



# வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை
# ஆண்டுப் பெருவிழா - 2017

இன்று, 10-09-2017, ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவ வேண்டுகின்றோம். உங்களின் நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுத்து உரிய ரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.

இன்று மாலை திருப்பலிக் கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்.

## ஞாயிறு சிந்தனை

“இயேசு, ‘இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்‘ என்றார்ா (மத்தேயு 18:20)

இயேசுவை நம்பிக்கையோடு ஏற்று வாழ்கின்ற மக்கள் குழு திருச்சபை. இது இயேசுவின் போதனையைப் பிரமாணிக்கமாகப் பின்பற்ற அழைக்கப்படுகின்ற மக்கள் குழுவாகத் திகழ்கிறது. இச்சபையின் சிறப்புப் பண்புகள் யாவை என மத்தேயு பல இடங்களில் விளக்குகிறார். இயேசுவின் திருச்சபையில் நிலவ வேண்டிய ஒரு முக்கியமான பண்பு “பாவ மன்னிப்பு”ஆகும். கடவுளுக்கோ மனிதருக்கோ எதிராகச் செய்யப் படுகின்ற பாவங்கள் கிறிஸ்தவ சமூகத்தை உள்ளிருந்தே கொல்கின்ற சக்தி வாய்ந்தவை. எனவே, குற்றம் செய்வோரைத் திருத்தி நல்வழிப்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இயேசுவின் போதனை (காண்க: மத் 18:15-18).

திருச்சபைக்குள் நிலவ வேண்டிய ஒற்றுமை பல நிலைகளில் வெளிப்பட வேண்டும். இறைவழிபாட்டுக்காகக் கூடி வருகின்ற திருச்சபையில் இந்த ஒற்றுமை தோன்றும். எனவே, ஒருமித்த மனத்தோடும் ஒத்த கருத்தோடும் இறைவனை வேண்டும்போது நம் வேண்டுதல் கேட்கப்படும். இயேசுவின் பெயரால் நாம் ஒன்றுகூடி வரும்போது நம்மிடையே அவரும் உடனிருப்பார் (மத் 18:20). இந்த வாக்குறுதி உயிர்த்தெழுந்த இயேசு தம் திருச்சபையோடு இருந்து அதை வழிநடத்துவதைக் குறிப்பதாக மத்தேயு நற்செய்தியின் இறுதியில் காண்கின்றோம். “இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என இயேசு வாக்களித்துள்ளார் (மத் 28:20). அதுபோலவே மத்தேயு நற்செய்தியின் தொடக்கத்திலும் இயேசுவின் பிறப்பின்போது அவர் “இம்மானுவேல்” (அதாவது “கடவுள் நம்முடன் இருக்கிறார்”) என அறிமுகப்படுத்தப்படுகிறார் (மத் 1:23). ஆக, கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைத்திலும் ஒன்றித்திருந்து, ஒற்றுமையோடு செயல்பட அழைக்கப்படுகிறார்கள். பிளவுகள் தோன்றினாலும் அவற்றைப் போக்குவதற்கான வழிகளைத் தேட வேண்டும். அன்பும் மன்னித்து ஏற்கும் பண்பும் நம்மில் மிளிர வேண்டும். அப்போது கடவுள் நம்மோடு இருக்கிறார் என்னும் உண்மை உலகுக்குத் தெளிவாகத் தெரியும்.

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $4,681.10 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

இம் மாதம் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $5,960.00 வெள்ளிகள்.

**GIFT விசுவாசத்துடனும் நன்றியறிதலுடனும் கொடுத்தல் திட்டத்திற்கான நினைவூட்டல்**

அடுத்த வாரயிறுதியில், கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | வு | ல் | இ | ர | க் | க | மி | கு | தி |
| சி | ட் | கை | ம் | மா | செ | ய் | தி | யை | க |
| லு | க | ணி | ச் | ச | ல் | தி | லி | கா | ல் |
| வை | ட | பே | கு | தா | ற | ப | உ | பி | யே |
| ப | ன் | பு | ற் | தி | ப் | யி | ல் | சா | ர |
| அ | ஈ | ன் | ற | த | ரு | ள் | வ | சு | ஸ் |
| ம | ன | மொ | த் | தி | ரு | ந் | தா | ல் | இ |
| சி | க | ர | தை | ர | ன் | லி | ள | சி | மெ |
| அ | தை | த் | ய | த | இ | க | டு | ம் | கா |
| க | ன் | ம | லை | க | ள் | மா | ட் | சி | மை |

1. நான் உன்னை ______________ வீட்டாருக்கும் காவலாளியாக ஏற்படுத்தியுள்ளேன்.
2. அவர்களது ______________ உன் மேலேயே சுமத்துவேன்.
3. உங்கள் ______________க் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
4. நீங்கள் யாருக்கும் எதிலும் ______________ படாதீர்கள்.
5. ______________ திருச்சட்டத்தின் நிறைவு.
6. ஒப்புரவுச் ______________ அவரே எங்களிடம் ஒப்படைத்தார்.
7. அவர் தனித்திருக்கும் போது அவரது ______________ எடுத்துக்காட்டுங்கள்.
8. எதைக் குறித்தும் ______________ விண்ணகத் தந்தை அதை உங்களுக்கு அருள்வார்.

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



முதலாம் வாசகம்: எசேக்கியேல் 33:7-9

பதிலுரைப்பாடல்: திருப்பாடல் 95:1-2.6-7.8-9

பதிலுரை: உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

இரண்டாம் வாசகம்: உரோமையர் 13:8-10

வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! கடவுள் உலகினரை கிறிஸ்துவின் வாயிலாகத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை அவரே எங்களிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா!

நற்செய்தி வாசகம்: மத்தேயு 18:15-20

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம் | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு | : சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**